# சைதை துரைசாமியின்
# மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்

28, முதல் பிரதான சாலை, சி.ஐ.டி.நகர், சென்னை-600035.
போன்: 2435 8373, 98401 06162
**Email:** manidhanaeyam@gmail.com **Website:** www.saidais.com


## தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம் (Sub-Inspector of Police) நடத்திய சார்பு ஆய்வாளர் பணிக்கு மனிதநேயத்தில் பயிற்சி பெற்ற 306 மாணவர்கள் வெற்றி !

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு **“மனிதநேய அறக்கட்டளை”** தொடங்கப்பட்டு, மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமுதாயப் பணிகள் இந்த அறக்கட்டளையின் மூலமாக செய்யப்பட்டு வருகின்றன.

**“மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகம்”** மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர்பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த பத்து ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ், ஐஎஃப்எஸ், ஐஆர்எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் -I, II (DC, DSP, DRO, DEO, CTO), சிவில் நீதிபதி பதவிகளுக்கும், SUB-INSPECTOR, A.E(HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT, PWD (CIVIL,ELECTRICAL)) போன்ற பதவிகளுக்கும் இதுவரை **2297கும் மேற்பட்ட மாணவ–மாணவியர்கள்** வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி மாதம் 8ஆம் தேதி தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் வெளியிட்ட காவல் சார்பு ஆய்வாளர்கள் பணிக்கு மே மாதம் 23 மற்றும் 24ஆம் தேதிகளில் திறன் பெற்ற ஆசிரியர்களை கொண்டு எழுத்துத் தேர்வுக்கு பயிற்சியும், ஆகஸ்டு மாதம் 3ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை சென்னை YMCA மைதானத்தில் தகுதியான பயிற்சியாளர்களைக் கொண்டு நடந்த உடற்தகுதித் தேர்வுக்கும் மற்றும் செப்டம்பர் மாதம் 3ஆம் தேதி முதல் அக்டோபர் மாதம் 19ஆம் தேதி வரை நடந்த நேர்காணல் தேர்விற்கு பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற உயர் காவல் துறை அதிகாரிகளைக் கொண்டு சிறப்பான முறையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

**சைதை துரைசாமியின் மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகத்தில்** பெற்ற பயிற்சியில் **306** மாணவ மாணவியர்கள் (பெண்கள் - **42**, ஆண்கள் - **263**, திருநங்கை - **1**) வெற்றி பெற்றுள்ளனர். (இதில் **60** காவல் துறையை சார்ந்தவர்கள்), **பிரித்திகா யாசினி** என்ற திருநங்கை தமிழ் நாட்டில் முதல் முறையாக **(Sub-Inspector of Police)** வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பயிற்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும், தேர்வுகள், பாடப்புத்தகங்கள், வகுப்புகள், 3க்கும் மேற்பட்ட மாதிரி நேர்முகத்தேர்வுகள் மற்றும் தங்கும் வசதி முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டதென இம்மையத்தின் மாநில தேர்வுகள் ஒருங்கிணைப்பாளர் திரு.சாம் ராஜேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.